
Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12




Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 5 ISSUE . 5

தனிப்பிரதி ரூ 20/= டிசம்பர் 2011



# இருதயத்தை காத்துக்கொள்

நிரோ கென்னடி



**நா**ம், பாவம் நிறைந்த இந்த உலகத்தில் வாழ்கிறோம். நம் சரீரத்தின் அவயவங்கள் பாவத்தில் விழுந்துவிடாதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நம் சரீரத்தை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நாம் கர்த்தருக்கு பயந்து அவருடைய வழிகளில் நடக்கும்போது, நாம் பாவத்தில் விழாதபடி காத்துக் கொள்ளலாம். நம் இருதயத்தை, நம் சொற்களை, கண்களின் நோக்கை, நம் செயல்களை காத்துக் கொள்ள வேண்டும். நம் இருதயம், வாய், கண்கள், கைகள், கால்கள் பாவத்தில் விழுந்து விடாதபடி பரிசுத்தமாக இருக்க ஒப்புக் கொடுப்போம் (நீதிமொழிகள் 4:23-27).

## இருதயம்

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள்: அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்** (நீதிமொழிகள் 4:23). நம் எண்ணங்களில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நம் எண்ணங்கள்தான் நம் வாழ்வை கட்டுப்படுத்தும். நம் இருதயத்தின் சிந்தனைகளை, ஆசைகளை காத்துக் கொள்ளவேண்டும். கெட்ட மற்றும் தீய சிந்தனைகள் வராதபடி, தொடர்ந்து காத்துக் கொள்ள வேண்டும். எந்தவிதமான தீமையும் ஒரு சிறு எண்ணத்தில் உருவாகிறது. வீண் ஆசைகள் நம் இருதயத்திற்குள் நுழைய விடக்கூடாது.

**வெளியே இருந்து மனிதனுக்குள்ளே போகும் எதுவும் அவனைத் தீட்டுப்படுத்தாது. அவனது உள்ளத்திலிருந்து வெளியே வருவதுதான் அவனைத் தீட்டுப்படுத்தும்** (மாற்கு 7:15). கெட்ட செயல்கள் நமது மனதின் எண்ணத்திலே தொடங்குகிறது. தீய காரியங்களைச் செய்ய நம் மனதில் இடங்கொடுக்கும்போது, பிறருக்குரியவற்றில் இச்சைப்படுவது, பொறாமைப்படுவது, வெறுப்புணர்ச்சியோடு பகையோடிருப்பது, பழிவாங்குவது ஆகிய பாவங்கள் நமக்குள் வருகின்றன. பாவ சிந்தனைகளுக்கு நம் மனதில் இடங்கொடுத்து அதைப் பற்றியே அதிகமாக சிந்தித்துக் கொண்டிருப்பது நம்மை பாவத்திற்கு நேராக வழிநடத்தும். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்ற வார்த்தையின்படி, நாம் பேசும் வார்த்தைகளின் மூலம் நம் இருதயத்திற்குள்ளிருப்பதை அறிந்து கொள்ளலாம். தீய காரியங்களைச் செய்ய நம் கவனத்தைச் செலுத்தி, நம்மை நாமே கறைப்படுத்திவிடக் கூடாது.





**மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு** (ஆதியாகமம் 6:5). மனிதர்கள் எல்லோரும் எல்லா காலத்திலும் பாவ எண்ணங்களோடு, ஒழுக்கக்கேடாக வாழ்வதை கர்த்தர் பார்த்தார். எல்லா எண்ணங்களும், நோக்கங்களும், சிந்திக்கிற சிந்தனைகளும் தொடர்ந்து தீமையானதாக இருந்தது. மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறு வயது தொடங்கி பொல்லாததாயிருந்தது.

**எப்படியெனில் மனுஷனுடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும்** (மாற்கு 7:21,22). இருதயத்தின் சிந்தனைகளே வார்த்தைகளாக, செயல்களாக வெளிப்படுகின்றன. கெட்ட காரியங்களெல்லாம் மனிதனின் இருதயத்திற்குள்ளிருந்துதான் வருகின்றன. மனதில் கெட்ட எண்ணங்கள், பாலியல் குற்றங்கள், களவு, கொலை, விபசாரம், சுயநலம், தீய செயல்கள், பொய், பொறாமை, புறங்கூறுதல், பெருமை பேசுதல் போன்றவை தோன்றும். இப்பாவங்கள் மனுஷனைத் தீட்டுப்படுத்தும். நேர்மையற்ற நடத்தை, உண்மையற்ற ஒன்றை உண்மையானதாகப் பிறரை நம்பச் செய்து ஏமாற்றுவது, வேறொருவருக்கு உரிமையானவற்றை அடைய பேராசை கொள்வது, நிறைய சொத்து, பணம் சேர்க்க மிகுதியான விருப்பம் கொள்வது, இழிவான நடத்தையோடு கட்டுப்பாடில்லாத ஒரு வாழ்க்கையை வாழ்வது, தீய கண்கள் (பிறர் நலம் காணப் பெறாதிருத்தல்), உண்மையல்லாததும் ஒருவரது நற்பெயரைக் கெடுக்கும் நோக்கமுடையதுமான பேச்சு (அவதூறு) பிறருக்கு மனவருத்தமுண்டாக்க வேண்டு மென்ற எண்ணத்தோடு பேசுவது, ஒருவரைப் பற்றி தவறான எண்ணத்தை தோற்றுவிக்க செய்வது, வன்சொற்களால் அவமதிப்பது, இருதயத்தில் பெருமை கொள்வது தேவனுக்கும், மனிதனுக்கும் மேலாக தங்களை உயர்த்துவது இருதயத்திலிருந்து வரும் பாவங்கள். இப்பாவங்களை செய்பவர்கள் மோசமான பின்விளைவை உண்டாக்கும் செயல் களை செய்வதோடு, சிந்தித்து செயல்படும் ஆற்றல் போதுமான அளவு இல்லாமல் இருப்பார்கள். ஆபத்தான விளைவு களைப் பற்றி எண்ணிப் பார்க்காதிருப் பார்கள். பிறரது விருப்பங்களையும் தேவைகளைப் பற்றியும் கவலைப்படாமல் இருப்பார்கள். தீய நோக்கங் களும், தீய விருப்பங்களும், தீயசெயல்களை செய்யும்படி தூண்டுகிறது.

மனிதனைக் கறைப்படுத்தும் பாவங்களைக் குறித்து பார்த்தோம். இப்பாவங்களை செய்வதினால் மட்டுமல்ல, இவற்றை சிந்திக்கும்பொழுதே தீட்டுப்படுகிறோம். நம் இருதயத்தின் எண்ணங்கள், சுத்தமாயிருந்தால் வாழ்க்கை முழுவதும் சுத்தமாயிருக்கும். **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்** (மத்தேயு5:8). தூய்மையான எண்ணமுடையவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நம்முடைய சிந்தனைகள், நோக்கங்கள்,சொற்கள், செயல்கள் ஆகியவற்றில் சரியாக இருக்கவேண்டும். தேவனுடைய ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, தீமை செய்யாமல், பரிசுத்த இருதயத்தோடு, விக்கிரகாராதனை (மாயை) இல்லாமல்,

உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். இந்த சுபாவங்களை உடையவர்களே பரலோகத்துக்கு செல்ல முடியும்.

**கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்** (பிலிப்பியர் *4:8*). நமது சொற்கள் மற்றும் செயல்கள் மூலம் மனதில் நாம் என்ன சேர்த்து வைத்திருக்கிறோம் என்பதை நாம் கண்டுபிடித்து விடலாம். நாம் உண்மையான சிந்தனைகளையே சிந்திக்கும்படியாய், நாம் நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் நேர்மையுள்ளவர்களாக பெரும் துணிவும், பரிவுணர்ச்சியும், பெருந்தன்மையுடையவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக பாராட்டுக்கு உரியவர்களாக இருக்கவேண்டும். நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். தூய்மையற்ற கெட்ட எண்ணங்களையுடையவர்களாய் இருக்கிறோமா? கெட்ட சிந்தனைகளைக் கொண்டு வரும் படங்களையோ, தொலைக்காட்சி நிகழ்ச்சியையோ, பத்திரிகையையோ, விளம்பரங்களையோ பார்ப்பதைத் தவிர்ப்போம். வேதவார்த்தையை படிப்போம். நம் மனது பரிசுத்தமானதையே, நல்லவற்றையே சிந்திக்கும்படி நம் கவனம் முழுவதையும் திருப்புமாறு தேவனை நோக்கி ஜெபிப்போம்.

நாவு

**வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து** (நீதிமொழிகள் *4:24*). நாம் பேசும் வார்த்தைகளின் மூலம் நம்முடைய குணத்தை அறிந்து கொள்ளலாம். நாம், வாயின் சொற்களை காத்துக் கொள்ள வேண்டும். பொய்யையும், நேர்மையற்ற நம்பகமற்ற பேச்சையும் விட்டு விலகவேண்டும். உண்மையை வளைத்துப் பேசக்கூடாது. சரியில்லாதவற்றை சரியென்று சொல்லக்கூடாது. தான் பேசுவது தவறு என்று அறிந்திருந்தும் வேண்டுமென்றே திட்டமிட்டு பேசுவதையும், கூறப்பட்டதற்கு எதிர்மாறாக பேசுவதையும், பிறர் சொல்வதைப் பொருட்படுத்தாது தன்னிச்சையாக தான் எண்ணியதையே பேசுவதையும் நம்மை விட்டு அகற்ற வேண்டும்.

**நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளைப் பேச அறியும்; துன்மார்க்கனுடைய வாயோ மாறுபாடுள்ளது** (நீதிமொழிகள் *10:32*) **நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்; மாறுபாடுள்ள நாவோ அறுப்புண்டுபோம்** (நீதிமொழிகள் *10:31*). நீதிமான்கள் பேசும்போது, மனநிறைவளிக்கக்கூடியதாக, ஏற்றுக் கொள்ளக்கூடியதாக, விரும்பத்தக்கதாக இருக்கும். தொல்லை உண்டாக்கும் காரியங்களைப் பேசுபவர்களின் வார்த்தைகளை ஜனங்கள் கேட்காமல் நிறுத்தி விடுவார்கள். **மாறுபாடுள்ளவன்** (தவறான போக்குள்ளவன்) **கர்த்தருக்கு அருவருப்பானவன்** (நீதிமொழிகள் *3:32*). தீமை செய்ய விரும்புகிறவர்களையும், பொய் சொல்லும் வாயையும் கர்த்தர் வெறுக்கிறார். கர்த்தருக்கு பயப்படும் பயம் நம் இருதயத்தில் இருக்கும்போது தேவன் வெறுக்கும் காரியங்களை நாம் பேசமாட்டோம். கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்று, புரட்டுவாய். தேவனுக்கு மனவேதனை உண்டு பண்ணும் வார்த்தைகளை பேசக்கூடாது. நல்லவர்களையும் நேர்மையானவர்களையும் கர்த்தர் ஆதரிக்கிறார். **நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து அவனுடைய நாவு நியாயத்தை



பேசும்** (சங்கீதம் *37:30*). நல்ல மனுஷன் எடுக்கும் முடிவுகள் ஒவ்வொருவருக்கும் நியாயமுள்ளவைகளாயிருக்கும்.

**தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்களல்லவோ? நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும், சத்தியமுமுண்டு** (நீதிமொழிகள் *14:22*). நம் சிந்தனைகளில் தீமையை யோசிக்காமல் நல்லதையே யோசிக்க வேண்டும். அப்பொழுது நம் வாயின் வார்த்தைகளும் ஆறுதலாக பிரயோஜனமுள்ளதாயிருக்கும். தீமை செய்ய திட்டமிடுகிறவர்கள் பாவம் செய்கிறார்கள். நன்மை செய்கிறவர்கள் மற்றவர்கள் மீது அன்புள்ளவர்களாக, அக்கரையுள்ளவர்களாக, இரக்கமுள்ளவர்களாக, விசுவாசமுள்ளவர்களாக, நேர்மையானவர்களாக இருப்பார்கள். அதனால் எல்லோரும் அவர்களை நேசித்து நம்புவார்கள்.

**நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள், எந்த சகோதரனையும் நம்பாதிருங்கள்; எந்தச் சகோதரனும் மோசம்பண்ணுகிறான், எந்தச் சிநேகிதனும் தூற்றித் திரிகிறான். அவர்கள் மெய்யைப் பேசாமல் ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள்; பொய்யைப் பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள், அக்கிரமஞ் செய்ய உழைக்கிறார்கள்** (எரேமியா *9:4,5*). எரேமியா தீர்க்கதரிசி யூதா ஜனங்களிடம், பொய் பேசுவது, ஏமாற்றுவதுமாகிய பாவங்கள் இருப்பதை உணர்ந்தான். எந்த சகோதரனையும் நம்பக்கூடாது என்றும், ஒவ்வொருவனும் ஏமாற்றுகிறவனாய் இருக்கிறான் என்றும், முதுகுக்குப் பின்னால் பேசுகிறான், யாரும் உண்மை பேசுவதில்லை என்றும் அவர்களுடைய நாக்கை கூர்மையான அம்புக்கும் ஒப்பிடுகிறான். ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் சமாதானமாய் பேசுகிறார்கள். ஆனால், இருதயத்தில் இரகசியமாக அவர்களைத் தாக்குவதற்கு திட்டமிடுகிறார்கள்.

**விரியன் பாம்புக்குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்** (மத்தேயு *12:34*). இயேசு கிறிஸ்து சொல்லுகிறார், நம் இருதயத்திற்குள் இருப்பது, நாம் பேசும் வார்த்தைகள் மூலம் வெளிப்படுகிறது. நல்லவன் தன் உள்ளத்தில் நல்லவைகளை வைத்திருக்கிறான். எனவே அவன் நல்ல வார்த்தைகளை தன் உள்ளத்திலிருந்து பேசுகிறான். பொல்லாத மனிதன் தன் உள்ளத்தில் பொல்லாதவைகளைச் சேர்த்து வைத்திருக்கிறான். எனவே அவன் பொல்லாதவைகளைத் தன் உள்ளத்திலிருந்து பேசுகிறான். நாம் நல்ல வார்த்தைகளையே பேசுவோம். பரிசுத்த ஆவியானவரால் நாம் நிரப்பப்படும்போது நம் நோக்கங்கள், குறிக்கோள்கள் புதியதாய் மாறும். அப்பொழுது நல்ல வார்த்தைகளை பேசுவோம்.

அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் அனனியாவும், அவனது மனைவியாகிய சப்பீராளும் பொய் சொன்னதினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. இவர்கள் பேதுருவிடம் பொய் சொல்லவில்லை. பேதுருவுக்குள்ளிருக்கும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் பொய் பேசினதால் ஜீவனை விட்டார்கள். இவர்கள் இருவரும் தங்கள் நிலத்தை விற்ற பணத்தில் இரகசியமாக ஒரு பங்கை தங்களுக்கென்று எடுத்து வைத்து விட்டு, ஒரு பங்கை பேதுருவிடம் கொடுத்தனர். விற்ற பணம் முழுவதையும் கொடுத்து விட்டதாக

வெளியே காண்பித்தனர். சாத்தான் அவர்களுடைய இருதயத்தை ஆள அவர்கள் இடங்கொடுத்தனர்.

நாம் பேசும் வார்த்தைகளில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். பொய் சொல்வதும், காரணமில்லாமல் கோபமாகப் பேசுவதும், அவதூறு பேசுவதும், புறங்கூறுவதும் நம்மைவிட்டு நீக்கிவிட வேண்டும். மாறுபாடான இருதயம் தன்னை விட்டு அகல வேண்டும் என்று தாவீது ஜெபிக்கிறான் (சங்கீதம் 101:4). நேர்மையாக இருப்பேன் என்றும் தீயகாரியங்களை செய்யமாட்டேன் என்றும் உறுதியோடிருந்தான்.

அப்போஸ்தலனாகிய பேதுரு ஜனங்களிடம், நீங்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்று பிரசங்கித்தான். மேலும் மாறுபாடுள்ள மக்களை விட்டு விலகி விசுவாசிகளோடு சேர்ந்து கொள்ளவேண்டும் என்றும், உலக மக்களின் வாழ்க்கை முறைகளை விட்டு விலகவேண்டும் என்றும், அம்மக்களின் தீமைகளிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள் என்றும் எச்சரித்தான். **மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்** (அப்போஸ்தலர் 2:40) என்றும் புத்தி சொன்னான். நேர்மையற்ற, ஒழுக்கமற்ற ஜனங்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும். **மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை; புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான்** (நீதிமொழிகள் 17:20). நாம் நம் சுயபெலத்தால் நாவை கட்டுப்படுத்த முடியாது. ஆவியானவரின் பெலத்தால் மட்டுமே நம் நாவை கட்டுப்படுத்த முடியும். பரிசுத்த ஆவியானவரை கேட்டு பெலனை பெற்றுக் கொள்வோம். நல்ல வார்த்தைகளையே பேசுவோம்.

**கண்**

**உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது** (நீதிமொழிகள் 4:25). நாம் நம் கண்களின் நோக்கை காத்துக் கொள்ள வேண்டும். நாம் நேராக முன்னால் பார்க்க வேண்டும். கண்கள் இலக்கின்மேல் பதிந்திருக்க வேண்டும். நல்ல குறிக்கோளிலிருந்து விலகி விடக்கூடாது. அப்படி விலகிச் செல்வது பாவத்துக்கு நேராக வழிநடத்தும். நாம் சரியான வழியில் நடக்கிறோமா என்பதில் கவனமாய் இருக்க வேண்டும். ஆசைகளுக்கு ஒரு எல்லை இருக்க வேண்டும். பார்க்கிற ஒவ்வொன்றிற்கும் பின்னால் போகக் கூடாது.

**ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று** (மத்தேயு 5:28). வாழ்க்கைத் துணையைத் தவிர வேறு யாருடனும் தொடர்பு வைத்திருப்பது தவறு, அது பாவம். **விபச்சாரம் செய்யாதிருப்பாயாக** என்று யாத்திராகமம் 20:15 கூறுகிறது. ஒரு ஸ்திரீயை கெட்ட எண்ணத்தோடு பார்த்தாலே இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்கிறவனாயிருக்கிறான் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இக்குறிப்பிட்ட செயலில் ஈடுபடுகிறதை தவறு என்று வலியுறுத்துகிறார். இச்செயல் இருதயத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. மனதில் ஒரு உள்நோக்கத்துடன் அதைக்குறித்தே சிந்தித்து, திரும்பத் திரும்ப அதே எண்ணத்தால் இருதயத்தை நிரப்பி தான் விரும்புவதை கற்பனை செய்து, மனக்கண்வழியாக பார்த்தபின்



அதை செயல்படுத்த வைக்கிறது. அதன்படி நடக்கும்போது தீமையில் கொண்டுபோய் விடும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கு உடலளவில் நம்பிக்கைக்குரியவராக இருந்துவிட்டு, இருதயத்தில் உண்மையில்லாமல் இருந்தீர்களென்றால், நம்பிக்கையை உடைத்துப் போடுகிறீர்கள். வாழ்க்கைத் துணை தன்னை ஏமாற்றமாட்டார்கள் என்ற ஒருவர் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்கிறது. திருமணத்தின்போது கர்த்தருக்கு முன்பாகச் செய்த வாக்குறுதியை முறித்து விடுகிறீர்கள்.

இருதயத்தின் பாவ இச்சைகள் மற்றும் பாவமான விருப்பங்களின்படி செய்வது, பலவிதமான வழிகளில் சேதத்தை உண்டாக்குகிறது. சிலர் பாவத்தை செய்துவிட்டு, பின் தனது நடத்தைக்கு விளக்கம் அளிக்கும்பொருட்டு ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி சாக்குபோக்கு சொல்லி சமாளிப்பார்களேயொழிய பாவம் செய்வதை நிறுத்தமாட்டார்கள். பாவச் செயல்கள் திருமண வாழ்வை சேதப்படுத்துகிறது. தேவனுடைய வார்த்தைக்கு எதிராக செயல்பட வைக்கிறது. வேண்டுமென்றே குடும்பத்தில் வன்முறையைக் கையாண்டு கிளர்ச்சி செய்ய வைக்கிறது. பாவம் செய்தவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை காயப்படுத்துகிறார்கள். அதனால் பிள்ளைகளின் மனதும் பாதிக்கப்படுகிறது. பாவச் செயல்கள் மிகவும் ஆபத்தானது. அவைகள் தேவனை விட்டு வேறுபக்கமாக திருப்புகிறது. பாவங்கள் நம்மிடம் உள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்த்து, தேவனிடம் நம் பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும். இல்லையென்றால் பாவம் நம்மை அழித்துவிடும்.

**உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு, உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுபோவது உனக்கு நலமாயிருக்கும்** (மத்தேயு 5:29). பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. **உன் இருதயத்தில் அவள் அழகை இச்சியாதே அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத் தப்பான். ஸ்திரீயுடனே விபசாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான்.** (நீதிமொழிகள் 6:25,29,32). இச்சை என்றாலே அது ஆபத்திற்கு அடையாளமாயிருக்கிறது. எதிர்பாலர் மேல் நீங்கள் இச்சை கொண்டீர்களென்றால் அல்லது அவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தீர்களென்றால், இந்த ஆசையானது பாவத்தில் கொண்டு போய்விடும். தேவனுடைய உதவியை நாடி, அவரை நோக்கி ஜெபிக்கும் போது, அவர் உங்கள் ஆசையை மாற்றி நீங்கள் பாவத்தில் விழுந்து விடாதபடி பாதுகாப்பார். நாம் நம்மை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் பாவம் நமக்குள் வந்து முடிவில் நம்மை அழித்து விடும். பாவம் செய்ததற்கான தீர்ப்பும் அதற்கான தண்டனையும் நம்மேல் வரும். தன் வாழ்க்கைத் துணையைத் தவிர வேறொருவருடன் தொடர்பு கொள்வது மதிகேடான செயலாகும். இச்சையான எண்ணங்களை இருதயத்தை விட்டு அகற்றி ஒருவருக்கொருவர் விசுவாசமாக, உண்மையாக இருக்க வேண்டும். பாவம் செய்யும்

மனப்பான்மையோடு இருப்பதும் பாவம்தான். நம் இருதயத்தையும், சரீரத்தையும் பாவத்திற்கு இடங்கொடாமல் காத்துக் கொண்டு கவனமாயிருக்க வேண்டும்.

இன்றைக்கு நாம் சிந்திக்கும் சிந்தனையே நாளைய செயலாக வடிவெடுக்கிறது. செயலைக் கட்டுப்படுத்த முயல்வதைப்போல சிந்தனைகளையும் அடக்க வேண்டும். சிந்தை, செயலின் கருவாகும். கண்ணை கட்டுப்படுத்தாததினால் அல்லவா தாவீது பத்சேபாளுடன் பாவத்தில் வீழ்ந்தான்.

**தாவீது தன் அரண்மனையின் மாடியில் உலாவிக் கொண்டிருந்த போது, ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயைக் கண்டான். அந்த ஸ்திரீ வெகு சௌந்தரியவதியாயிருந்தாள்** (2 சாமுவேல் *11:2*). இஸ்ரவேல் தேசத்து ஜனங்களெல்லாரும் போருக்கு சென்றிருந்த நேரம் தாவீது, போருக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தான். குளித்துக் கொண்டிருக்கிற பெண்ணை பார்த்தான். பின் அந்த ஸ்திரீ யாரென விசாரித்து, அவளைத் தன்னிடம் அழைத்து வரச் செய்தான். தெரியாமல் பார்ப்பதில் தவறில்லை. மறுபடியும் பார்த்து அதே சிந்தையில் இருப்பது தவறு. தாவீது இச்சையினால் நிறைந்து, அந்த ஸ்திரியைப் பற்றியே சிந்தித்ததினால், அவளைப் பற்றி விசாரித்து, அவள் யாரென தெரிந்து கொள்ள மிகவும் ஆர்வமாயிருந்தான். பின் அவளை அழைத்து விபச்சாரம் செய்தான்.

அத்தீய சிந்தனை அவனை நிலைகுலையச் செய்தது. பின் பாவத்தை மறைக்க முயன்று இன்னும் தொடர்ந்து பல பாவங்களைச் செய்தான். பத்சேபாளின் கணவனான உரியாவை தனது படைத்தலைவனான யோவாபை வைத்து, கொலை செய்து, அவளை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். கண்களின் இச்சையினால் முதலில் இந்த பாவம் நுழைந்தது. தாவீது தன் கண்களை இச்சைக்கு இடங்கொடுத்ததினால், தான் பாவம் செய்தது மட்டுமல்லாமல், யோவாபையும், பத்சேபாளையும் பாவம் செய்ய வைத்தான். பாவம் செய்துவிட்டு பாவ உணர்வில்லாமல் இருந்தான். கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசியாகிய நாத்தானின் மூலமாக தாவீதோடு பேசி, அவனுடைய தவற்றை கண்டித்து உணர்த்தினார். நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன் என்று தாவீது தன் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பினான். ஆனால், தான் செய்த பாவத்திற்கான விளைவுகளை சந்தித்தான். தாவீதின் மகனான அப்சலோம் தாவீதுக்கு எதிராக வந்தான். தாவீதின் மகன்கள் அம்னோன், அப்சலோம், அதோனியா கொலை செய்யப்பட்டனர். தாவீதின் மகள் கற்பழிக்கப்பட்டாள். பாவம் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்று சொல்லி, மறுபடியும், மறுபடியும் பாவத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு பாவத்தின் விளைவுகள் ஏற்படும்.

தாவீது பாவம் செய்ய இடங்கொடுத்தான். தீவிரமான சிந்தனையில் மூழ்கி, முழு ஈடுபாடு செலுத்தினான். தனது விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே தன் கவனத்தைச் செலுத்தினான். தான் பார்ப்பது தவறு என்று அறிந்திருந்தும் அதனை விரும்பிப் பார்த்தான். அதற்குப் பதிலாக தன் கண்களை வேறு பக்கம் திருப்பியிருக்கலாம். அந்த இடத்தை விட்டே சென்றிருக்கலாம். அவன் ஆரம்பத்திலேயே பாவம் செய்ய இடங்கொடுக்காமல், அதைவிட்டு விலகிச் சென்றிருக்கலாம். பாவத்திற்கு



இடங்கொடுத்து விட்டால் அதனை நிறுத்துவது மிகவும் கடினம். தேவனை நோக்கி ஜெபிக்கும்போது சோதனையில் விழாதபடி பாதுகாப்பார். பாவத்தில் விழுந்து விடாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

யோபு தன் கண்களோடு ஒப்பந்தஞ் செய்து கொண்டான். எந்த கெட்ட எண்ணமும் அவனிடம் இல்லை. இச்சையை தூண்டுகிறவற்றை பார்க்கமாட்டேன் என்ற உறுதியோடிருந்தான். **என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?** (யோபு *31:1*). விபசாரம் என்ற பாவத்தில் விழாதபடி யோபு தன்னை காத்துக் கொண்டான். ஏனென்றால் கெட்ட சிந்தனைகளுக்கு அவன் இடங்கொடுக்கவில்லை. **என் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கி அயலானுடைய வாசலை நான் எட்டிப் பார்த்ததுண்டானால்** (யோபு *31:9*). யோபு தன் கண்களினால் பாவஞ்செய்யாதபடி தன்னைக் காத்துக் கொண்டான். மற்றொருவனுடைய மனைவியின் மேல் ஆசைப்படவில்லை. **விபசாரனுடைய கண் மாலை மயங்குகிற வேளைக்குக் காத்திருந்து; என்னை ஒரு கண்ணும் காணமாட்டாதென்று முகத்தை மூடிக் கொள்ளுகிறான்** (யோபு *24:15*). இச்சையோடு பார்க்கிறவன், யாரும் தன்னை பார்க்க மாட்டார்களென்று நினைக்கிறான். ஆனால், கர்த்தர் அவனை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை மறந்து விடுகிறான்.

**அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்** (யாக்கோபு *1:14,15*). நாம், நம்முடைய சுய ஆசையினால் இழுக்கப்பட்டு சோதிக்கப்படுகிறோம். தேவன் நம்மை பரிசோதிப்பார். ஆனால், சோதிக்க மாட்டார். இச்சைபட வைத்து பாவத்தில் விழவைக்கமாட்டார். சாத்தான் நம்மை சோதிக்க அனுமதிப்பார். நம்மை சுத்திரிகரிக்கவும், விசுவாசத்தில் வளரவும், தேவனைச் சார்ந்த வாழ்க்கையை வாழவும் விரும்புவார். நாம் பாவத்தை எதிர்த்து போராடி, அவருடைய பெலத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க தீர்மானிக்க வேண்டும்.


தவறான நடத்தைக்கு, தேவனுக்கு முன்பாக ஒருவரும் சாக்குப்போக்கு சொல்ல முடியாது. தீய எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் விளக்கம் அளிக்கும் பொருட்டு நாம் மற்றவர்களை காரணம் காட்டுகிறோம். மற்றவர்களும் பாவம் செய்கிறார்கள் என்று சொல்லலாம். எல்லோரும் தவறு செய்கிறார்கள், முழுமையானவர்கள் ஒருவருமில்லை என்று கூறலாம். சாத்தான்தான் தவறு செய்யும்படி செய்தான் என்று கூறலாம். மற்றவர்கள் வற்புறுத்தினதால் தவறு செய்தேன் என்றோ, மன அழுத்தத்தினால் செய்தேன் என்றோ, தெரியாமல் செய்து விட்டேன் என்றோ, தேவன் தான் என்னை சோதித்தார் என்று மனிதன், தான் செய்தவற்றிற்கு சாக்குபோக்குச் சொல்லி மற்றவர்கள் மேல் பழியை சுமத்தி விடலாம். ஆனால், தேவனுக்கு மறைவானது ஒன்றும் இல்லை. நாம் செய்த தவறை உணர்ந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு மனந்திரும்பி விட வேண்டும்.

பலவிதமான இச்சைகளை தூண்டும் சோதனைகள் வரும்போது,

உடனடியாக அவற்றை மேற்கொண்டு விடவேண்டும். தொடர்ந்து மனவிருப்பத்தோடு அதே சிந்தனையில் இருந்தால், பாவம் பிறப்பிக்கப்படுகிறது. நம்முடைய ஈடுபாடின்றி நாம் பாவத்தில் விழமாட்டோம். தான் செய்வது பாவம் என்று அறிந்திருந்தும், அதை செய்ய விரும்புவது தவறு. இச்சைகள், தீய ஆசைகள் நம் இருதயத்திலிருந்து வருகிறது. தேவனிடத்திலிருந்து வருவதல்ல. தீயசிந்தனைகளிலே இவைகள் தொடங்கி பின் இது பாவமாக மாறுகிறது. அதைப் பற்றியே மிகுதியாக சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, அது செயலாக மாறுகிறது. பாவம் பல அழிவுகளைக் கொண்டு வருகிறது. ஆனால், யோசேப்புக்கு பாவம் செய்யும்படியான சூழ்நிலை வந்தபோது அந்த இடத்தை விட்டே ஓடிப்போனான். **பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோட வேண்டும்** என்று 2 தீமோத்தேயு 2:22 கூறுகிறது.

தேவன், ஆதாம் ஏவாளை ஏதேன் தோட்டத்தில் வைத்து, தினமும், அவர்களோடுகூட உறவாடிக் கொண்டிருந்தார். தோட்டத்தின் நடுவிலுள்ள கனியை நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொல்லியிருந்தார். சர்ப்பமானது ஏவாளிடம், நீங்கள் அதை புசித்தால் சாவதில்லை என்று கூறியது. ஏவாள் அதை அப்படியே நம்பி, ஏமாற்றப்பட்டாள். அப்பொழுது ஸ்திரீயானவள், **அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கும் இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு,அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்** (ஆதியாகமம் 3:6). பார்வையில்தான் இச்சை ஆரம்பித்தது. தேவன் புசிக்கக்கூடாது என்று சொன்ன கனியை ஏவாள் பறித்து உண்ணும்படி செய்து, அவளை பாவம் செய்ய வைத்தது. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்து, தேவனுடைய ஐக்கியத்திலிருந்து விலகச் செய்தது. தேவன் அவர்களைச் கூப்பிட்டபோது, ஒளித்துக் கொண்டனர். தேவனிடம் தாங்கள் செய்த தவற்றை ஒத்துக் கொள்ளாமல், மற்றவர்கள்மேல் பழியை போட்டனர்.

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல (1 யோவான் 2-16). இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்பட்டபோது, வேத வசனத்தால் அவனை மேற்கொண்டார். நாம் வேத வசனத்தை



வாசித்து தியானித்து அதன்படி நடக்க வேண்டும். வேத வார்த்தையை சந்தேகப்படாமல், அதை அப்படியே



விசுவாசிக்க வேண்டும். நாம் சந்தோஷமாக, சமாதானமாக, கவலையில்லாமல் வாழவே நம் தேவன் விரும்புகிறார். ஆனால், சாத்தானோ நம்மை தந்திரமாக பாவத்தில் விழ வைக்கிறான். நாம் கலக்கத்தோடு, வேதனையோடு, சமாதானமில்லாமல் பாவத்தோடு வாழவே அவன் விரும்புகிறான்.

### கால்கள்

**உன் கால்நடையைச் சீர்தூக்கிப் பார்; உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக, வலது புறமாவது இடதுபுறமாவது சாயாதே; உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக** (நீதிமொழிகள் 4:26,27). நாம் ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பாகவும், முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன்பாகவும் நன்கு ஆராய்ந்து அறிந்து சரியான பாதையில் செல்ல வேண்டும். செய்கின்றவற்றில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சரியான பாதையில் செல்லும்படி நாம் உறுதியோடிருக்க வேண்டும். நாம் செய்கிற அனைத்தையும் கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.நாம் எங்கே போகிறோம் என்பதை கர்த்தர் கவனிக்கிறார். **மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார்** (நீதிமொழிகள் 5:21). நம்முடைய ஒவ்வொரு சிந்தனைகளையும், செயல்களையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். அதைக் குறித்து வைத்திருக்கிறார். நம்முடைய வழிகள் நேரானதாகவும், ஒழுங்கானதாகவும், நிலையானதாகவும், நம்முடைய நடத்தைகள்,செயல்கள் நியாயமானதாக, நன்னடத்தையுள்ளதாக இருக்க வேண்டும். நாம் நேரான வழியிலிருந்து விலகிவிடக்கூடாது. அந்த வழியே சரியானதாகும். தீமையை நம்மைவிட்டு அகற்றி அதற்கு விலகியிருக்க வேண்டும். தீய காரியங்களை சிந்திக்காமல், நல்லவற்றையே சிந்திக்கும்போது, நம் கால்களை தீமைக்கு விலக்கி காத்துக் கொள்ளலாம். தீய செயல்களை செய்வதற்காக ஓடிக் கொண்டிருக்கும் ஜனங்களை எளிதில் கட்டுப்படுத்த இயலாது. அநேகர் தீய செயல்களை செய்து கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் மனிதர்களின் தீய செயல்கள் எல்லாவற்றையும் தெளிவாக பார்த்துக் கொண்டிருக்கிறார் **கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலிருந்து நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது** (நீதிமொழிகள் 15:3). தீய எண்ணங்களையும், இருதயத்தில் மறைந்திருக்கிற நோக்கங்களையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். தேவனுடைய செயல்களை நாம் பார்க்கவோ, உணரவோ முடியாது. ஆனால், ஒரு நாள் தீமை செய்பவர்களுக்கு நிச்சயமாகவே தண்டனை கொடுப்பார். அவருடைய சித்தத்தின்படி செய்கிறவர்களுக்கு அவருடைய பிள்ளைகள் என்று உறுதிப்படுத்தி, அவர் தக்க பலனைக் கொடுப்பார்.

**உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடது புறம் சாயாதிருப்பீர்களாக** (உபாகமம் 5:32). கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்க நாம் கவனமாயிருக்க வேண்டும். அனுதினமும் கர்த்தருடைய வார்த்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். கட்டளைகளை விட்டு விலகாமல் இருக்கவேண்டும். வேதவார்த்தையின்படி நடக்காமல், அதை விட்டு விலகும்போது பல இன்னல்கள் நம் வாழ்க்கையில் வரும்.

**என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிற**

**தில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை** (எரேமியா *16:17*). அநேகர் பாவ வழிகளில் செல்வதற்கு கண்களை மூடிக் கொண்டு செல்கிறார்கள். ஆனால், தேவனுக்கு அது மறைவாயில்லை. எல்லாவற்றையும் பார்க்கிற தேவனை நாம் ஒருபோதும் ஏமாற்ற முடியாது. பாவச் செயல்களை செய்யும்போதும், பாவஞ் செய்யும் குறிக்கோளுடன் இருக்கும்போதும், தேவன் அதை கவனிக்கமாட்டார் என்று நம்புகிறீர்களா?

நாம் செய்த எல்லாப் பாவங்களையும் தேவன் அறிந்திருக்கிறார் என்பதை நாம் ஏற்றுக் கொண்டு நாம் செய்த பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும். பாவம் செய்வதற்கான வாய்ப்பு வரும்போது, கர்த்தர் எல்லாவற்றையும் பார்க்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். யாருக்கும் எப்போதும் தெரியாது என்றும், யாரும் என்னை பார்க்கவில்லை ஆகிய எண்ணங்கள் இருக்கக்கூடாது.

**யூதா தேசத்து ராஜாவாகிய ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான்** (2 நாளாகமம் *14:2*). தான் கர்த்தரை பின்பற்றினதுமல்லாமல் தன் தேசத்து ஜனங்களும் கர்த்தரை சேரும்படி செய்து, கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ளும்படி செய்தான். தன் தேசத்திலுள்ள சிலைகளை அகற்றி, விக்கிரகங்களை வழிபடுவதைத் தடுத்தான். கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை தேசத்தை விட்டு அகற்றினான். அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து நடந்ததால் கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார். அவன் செய்த காரியங்களை கர்த்தர் வாய்க்கச் செய்தார். ஆசாவுக்கு எதிராக எத்தியோப்பியனாகிய சேரா பத்து லட்சம் பேர்கள் சேர்ந்த சேனைகளோடு வந்தபோது, ஆசா கர்த்தரை நோக்கி இப்படியாக ஜெபித்தான்: **கர்த்தாவே பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும் என்றான்** (2 நாளாகமம் *14:11*) கர்த்தரே வெற்றி தருகிறவர். அவன் கர்த்தரை சார்ந்து கொண்டபோது, அவனுக்கு எதிராக வந்த எதிரிகளை கர்த்தர் முறியடிக்கச் செய்தார். நாமும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவருடைய வழியில் நடக்கும்போது நம்முடைய வாழ்க்கையில் சமாதானம் உண்டாகும்.

ஆசாவின் இறுதி நாட்களில். அவன் தேவனை விட்டு வழிவிலகிப் போனான். தேவன்மேல் நம்பிக்கை வைக்காமல் தேவனை அறியாத மனிதர்கள்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரை சார்ந்து கொள்ளாமல் மனிதர்களை சார்ந்து இருந்தான். இஸ்ரவேல் தேசத்து ராஜாவாகிய பாஷா, ஆசாவுக்கு எதிராக செயல்பட்டபோது, அவன் சீரிய தேசத்து ராஜாவாகிய பெனாதாத்தின் உதவியை நாடினான். அவனுக்கு பொன்னையும், வெள்ளியையும் அனுப்பி தனக்கு உதவி செய்யும்படி அழைத்தான். அவன் கர்த்தரை நோக்கிக் கூப்பிடாமல், அவரைச் சார்ந்து கொள்ளாமல் மனிதனை சார்ந்து கொண்டான். கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசியின் மூலமாக ஆசாவை எச்சரித்தார். தன்னை எச்சரித்த தேவ மனுஷனை சிறையில் அடைத்தான்.



அவனுக்கு வியாதி வந்தபோதும், அவன் கர்த்தரைத் தேடாமல், அவருடைய உதவியை நாடாமல், மருத்துவர்களின் உதவியையே நாடினான். தேவனுடைய உதவியை புறக்கணித்தான். நாம் மருந்துகள் எடுத்தாலும் சுகம் கொடுப்பது கர்த்தர்தான். நாமும் ஆசாவைப்போல கர்த்தரிடம் உதவியைக் கேட்காமல், முக்கியமான முடிவுகளை நாமே எடுத்து விடுகிறோம். இதனால் பல ஆசீர்வாதங்களை இழந்து விடுகிறோம். ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய வழியில் நடக்க நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம். கர்த்தர் நம்மை அவருடைய ஊழியக்காரர்கள் மூலம் எச்சரித்தால் நம்மைத் தாழ்த்தி கர்த்தருடைய ஆலோசனையின்படி அவருடைய வழியில் நடக்க வேண்டும்.

நாம் தேவனுடைய வழியை தெரிந்து கொள்ளும்படி தேவன் நமக்கு ஞானத்தை கொடுக்கிறார். வேத வார்த்தைகள் நம்மை நேரான பாதையில் நடத்தி, சரியான தீர்மானங்களை எடுக்க உதவி செய்கிறது.

கர்த்தர், நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார் (எண்ணாகமம் *24:1*). அதற்கு தடையாக இருப்பது நாம் செய்யும் பாவமே. இந்த பாவத்திலிருந்து நம்மை மீட்டு எடுக்க, தேவனே மாம்சத்தில் இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமிக்கு வந்து, சிலுவையில் இரத்தம் சிந்தி நம்மை பாவத்திலிருந்து மீட்டெடுத்தார். இந்த இரட்சிப்பு விலையேறப்பெற்றது. அதை அலட்சியம் பண்ணாதிருப்போம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், சமாதானமும் உங்களோடிருப்பதாக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா





# தேவ சித்தம் ④

பால்ராஜ் ஜோசப்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவ சித்தம் நிறைவேறுவது ஒவ்வொரு விதத்தில் இருக்கும். அதினால், மற்றவர்களுடைய வாழ்க்கையில் தேவ சித்தம் நிறைவேறுவதைப் பார்த்து, நம்முடைய வாழ்க்கையை அவர்களுடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. மோசேயை கர்த்தர் வழிநடத்தியதுபோல, சாலொமோனை வழிநடத்தவில்லை. கர்த்தர் மோசேயை வனாந்திரத்தின் பாதையிலே வழிநடத்தினார். ஆனால், சாலொமோனை சமாதான மான பாதையிலே வழிநடத்தினார். ஏன் இப்படியாக கர்த்தர் வழி நடத்துகிறாரென்றால், ஒவ்வொரு மனுஷனுக்கும் கர்த்தர் வெவ்வேறு தரிசனத்தை வைத்திருக்கிறார். அந்த தரிசனத்தை நிறைவேற்ற கர்த்தர் மனுஷனை தகுதிப்படுத்த, உருவாக்க வேண்டியிருக்கிறது.

ஒரு மனுஷனைக்குறித்து கர்த்தர் என்ன தரிசனம் வைத்திருக்கிறார் என்பதை முதலாவது அறிந்து கொள்ள வேண்டும். அதை அறிந்து கொண்டோமானால், இப்பொழுது அந்த மனிதனுடைய வாழ்க்கையில் என்ன நடக்கின்றது, ஏன் நடக்கின்றது, எதற்காக கர்த்தர் அப்படி நடத்துகிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். வேதத்தை அதிகமாகத் தியானிக்க வேண்டும். இதுதான் தேவ சித்தத்தை அறிந்து கொள்வதில் பிரதானமானதும், முக்கியமானதுமாகும். ஒருபோதும் நமது சுய மனதின் யோசனையின்படி, உணர்ச்சியின்படி தேவ சித்தத்தை கணிக்கக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் நமது உள்ளத்தில் நமது உள்ளுணர்வு மூலம் உணர்த்தும்போதும், வேதத்தின் வார்த்தையை அடிப்படையாக வைத்துத்தான் உணர்த்துவார்.

உங்களது கண்களுக்கு முன்பாக நடக்கும் காரியங்களை பார்த்து தேவ சித்தம் நிறைவேறுகிறது என்று நினைத்து விடாதீர்கள். எல்லாவற்றையும் வேதத்தின் வார்த்தையைக் கொண்டு நிதானிக்க வேண்டும். அதுதான் தேவ சித்தத்தை துல்லியமாக அறிந்து கொள்ளும் வழி. ஏதோ ஒரு வசனத்தை நாமாக ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு தேவ சித்தமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் அந்த சூழ்நிலைக்கான வேத வசனத்தை நமக்கு காண்பிக்க வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கும், சாத்தானுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை எடுத்துப் படித்துப் பாருங்கள். (மத்தேயு *4:1-10*).

இன்று, அநேகர் வேதத்தின் வசனங்களை மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு, நமது சூழ்நிலைக் கேற்ற வசனத்தைச் சொல்லி, இதுதான் தேவ சித்தம் என்று சொல்கிறார்கள். இது கர்த்தருடைய வார்த்தையாக இருப்பதால், அது நமக்கு பக்தியாகத் தெரிகிறது. அப்படி பக்தியாகத் தெரிவதினால் அது தேவ சித்தமாகி விடாது.ஏனென்றால் அந்த வசனத்தை சொல்லுபவர், தமது ஞாபகத்திலிருந்து ஒரு வசனத்தை தானாக எடுத்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆவியானவர் அந்த குறிப்பிட்ட வசனத்தை எடுத்து அவரிடம் பேசவில்லை. அவராகப் பேசுகிறாரா? அல்லது கர்த்தர்தான் அவரிடம் பேசுகிறாரா என்பதை எப்படி அறிந்து கொள்ளலாமென்றால், அது கர்த்தர் சித்தமாக இருப்பின் அந்த வசனத்தை கேட்டவுடன் நமக்குள் உறுதியான நிச்சயம் உண்டாகும்.அதே சமயத்தில் சமாதானம் நமக்குள் உருவாகும்.

எப்போதும், யாராவது தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்களா என்று ஓடிக் கொண்டிருக்கக்கூடாது. நீங்கள் வேதத்தை படிக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும். வேதத்தை படிக்கும் போதும், தினமும் பெரியவர்கள், சிறுபிள்ளைகள்போல, ஓரிரு அதிகாரங்களை மாத்திரம் படிக்கக் கூடாது. வாலிபப் பிள்ளைகள் குறைந்தது 5 அதிகாரங்களும், பெரியவர்கள் குறைந்தது 7 அதிகாரங்களும் படிக்க வேண்டும். ஜெபிக்கும் போதும், வேதத்தின் வார்த்தைகளைச் சொல்லி கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். நாம் வேதத்தை படிப்பதும், ஜெபிப்பதுமே கர்த்தரோடு உறவு கொள்வதாகும். கர்த்தரோடு உறவு கொள்ள இதைத்தவிர வேறு வழி கிடையாது. நாம் கர்த்தரோடு இணைந்திருக்கும்போதுதான் சொல்லப்படுகிற தீர்க்கதரிசனம் நமது வாழ்க்கையில் நிறைவேறும். தீர்க்கதரிசனமும் எந்த நோக்கத்தோடு சொல்லப்படுகிறதென்றால், நம்மை கர்த்தரோடு நெருங்க வைப்பதற்கே (*1* கொரிந்தியர் *14:3*).

இன்றைக்கு அநேகர், தீர்க்கதரிசனத்தை குறிகேட்பதுபோல கேட்கிறார்கள். கர்த்தரை அவர்கள் தேடமாட்டார்கள். வெறுமனே தீர்க்கதரிசனம் மாத்திரம் கேட்பார்கள். தொலைக்காட்சியில் இன்றைய தட்பவெப்ப நிலையைப் பார்த்து தெரிந்துகொள்வதுபோல, தீர்க்கதரிசனம் கேட்பதன் மூலம் தங்களது வாழ்க்கையில் நடப்பதை அறிந்து கொள்வார்கள். அவர்கள் வேதத்தை படிக்கவோ, ஜெபிக்கவோ மாட்டார்கள்.

இன்னும் சிலர், கொஞ்சம் பணத்தை ஊழியக்காரனுக்கு காணிக்கையாகக் கொடுத்து விட்டு, சுலபமாக தீர்க்கதரிசனம் கேட்பார்கள். அவர்கள் உபவாசிக்கவோ, ஜெபிக்கவோ மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை, கொஞ்சம் பணத்தை கொடுப்பதன் மூலம் தீர்க்க தரிசனம் கேட்டுக் கொள்ளலாம், தேவ சித்தத்தை அறிந்து கொள்ளலாம். இதற்காக ஏன் கடுமையாக உபவாசித்து, கஷ்டப்பட்டு ஜெபிக்க வேண்டும்? என்பதே.